செய்தி வெளியீடு எண் : 972 நாள்: 15.06.2022

## செய்தி வெளியீடு

# மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முழுவதும் மின் பகிர்மான வட்டங்களில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணிகள் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (15.06.2022) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலத்தில் அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இருந்த 9 மண்டலங்களுடன் தற்போது புதிதாக உருவாக்கப்பட்ட 3 மண்டலங்களையும் சேர்த்து 12 மண்டலங்களில் உள்ள 44 மின் பகிர்மான வட்டங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி மற்றும் திட்டப் பணிகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கீழ்கண்ட முக்கிய அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது :-

1. எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கும், மழை காலங்களில் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்பு பணிகள் குறித்தும் கோட்ட அளவில் ஆய்வு செய்யப்பட்டது.

2. மின் பராமரிப்பு பணிகளான மரக்கிளைகள் வெட்டுதல், பழுதடைந்த மின் கம்பங்களை மாற்றுதல், தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகளை மாற்றுதல், பழுதடைந்த மின்பகிர்மான பெட்டிகளை சரி செய்வது ஆகிய பணிகளை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

3. தற்போது தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் வடிகால் பணிகளின் காரணமாக புதைவடங்களில் ஏற்படும் தற்காலிக பழுதினை உடனடியாக நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது.

4. புதிதாக உருவாக்கப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட மின் விநியோக (RDSS) திட்டத்தின் மூலம் விவசாய மின் இணைப்புகள் அதிகமாக உள்ள மின்பாதைகளை தனியாக பிரித்து புதிய விவசாய மின்பாதை ஏற்படுத்துதல், திறன் மிகுந்த மின்மாற்றிகளை மின்பளூ செறிவுள்ள பகுதிகளில் அமைத்தல், மேல்நிலை கம்பிகளை புதைவடங்களாக மாற்றும் திட்டம் மற்றும் பழுதடைந்த 33 கி.வோ. மின்பாதைகளில் உள்ள பழைய மற்றும் பழுதடைந்த மின்கம்பிகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை துரிதமாக முடிக்க அறிவுறுத்தப்பட்டது.

5. மின்னகத்தின் மூலம் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

6. நிலுவையில் உள்ள உயரழுத்த மற்றும் தாழ்வழுத்த விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கைகள்.

7. 2022-2023 ஆம் ஆண்டில் குறியீட்டு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள 50,000 எண்ணம் விவசாய மின் இணைப்புகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

8. மின் தளவாட பொருட்களின் இருப்பு, தேவை மற்றும் மின்தடை ஏற்படின் உடனடியாக நிவர்த்தி செய்து நுகர்வோருக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வழிவகை செய்தல்.

9. பழுதடைந்த மின் அளவிகள் மற்றும் மின்மாற்றிகளை உடனடியாக மாற்றுதல்.

10. நிலுவையில் உள்ள மின்நுகர்வு கட்டணங்களை வசூல் செய்வதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

11. சென்னையில் உள்ள 7 கோட்டங்களில் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றும் பணிகளை விரைந்து முடித்தல் ஆகியன குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோட்ட வாரியாக விரிவான ஆய்வினை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோட்ட அளவில் அதிக அளவு மின் தடைகள், மின்மாற்றிகள் பழுது மற்றும் புகார்கள் கொண்ட கோட்ட பொறியாளர்கள் தமது பணிகளில் தனிக்கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார். புகார்கள் குறையாத பட்சத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டார். சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியவற்றில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தனிக்கவனம் செலுத்தி மின்நுகர்வோரிடமிருந்து வரும் புகார்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவர்களுக்கு உத்தரவிட்டார் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள இதர துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் மின்பாதைகளில் முறையான பராமரிப்பு பணிகளை உரிய முறையில் மேற்கொள்ளுமாறு அனைத்து அலுவலர்களையும் கேட்டுக் கொண்டார்.

பொதுமக்களிடமிருந்து மின்தடை சம்பந்தமாகவோ, பாதுகாப்பு சம்பந்தமாகவோ தகவல் கிடைக்கப் பெற்றவுடன் அத்தகவலின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்துப் பொறியாளர்களையும் மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து அலுவலர்களையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசுகையில்:–

தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு முழுவதும் சீரான மின்விநியோகம் வழங்குவது குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர்கள் அளவில் இந்த ஆய்வு கூட்டம் காலையில் தொடங்கி நடைபெற்று வருகின்றது. குறிப்பாக, இந்த கோடைகாலத்தில் சீரான மின்விநியோகம் வழங்குவது, அதே போல வரக்கூடிய மழை காலங்களில் சீரான மின் விநியோகம் வழங்குவற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு புதிதாக அறிவிக்கப்பட்ட 316 துணைமின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அந்த புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்வதற்கும், அதே போல இந்த ஆண்டு 50,000 விவசாயிகளுக்கு இலவச மின்இணைப்பு வழங்குவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், புதிய கட்டமைப்புகளை உருவாக்குவது குறித்தும், தொழிற்சாலைகள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற சூழ்நிலையில் அந்த தொழிற்சாலைகளுக்கு விரைவாக மின்இணைப்புக்கள் வழங்குவது குறித்தும் இந்த ஆய்வு கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டது.

குறிப்பாக 316 துணை மின்நிலையங்கள் அமைப்பதை பொறுத்தவரை 271 துணைமின் நிலையங்களுக்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தினுடைய தன்மையின் அடிப்படையில் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 174 துணைமின்

நிலையங்கள் டெண்டர் கோருவதற்கு தயார் நிலையில் உள்ளன. மீதம் இருக்க கூடிய 45 துணைமின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் விரைவாக தேர்வு செய்யப்பட்டு அந்த இடத்தை பெறவேண்டும் என்று சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஓராண்டில் 13,32,790 பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதில் பழுதடைந்த மின்கம்பங்கள் 27,821 புதிதாக மாற்றப்பட்டுள்ளன, தாழ்வாக செல்லக்கூடிய மின்கம்பிகள் **74,407** இடங்களில் சரி செய்யப்பட்டுள்ளன.

இப்பொழுது சிறப்பு நேர்வாக அகற்றப்பட வேண்டிய மரக் கிளைகள் என 1,34,269 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அதேபோல் மாற்றப்பட வேண்டிய பழுதடைந்த மின் கம்பங்கள் 20,072 என தற்போது கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இது போன்று பல்வேறு பணிகள், ஒட்டுமொத்தமாக 3,37,558 பணிகள் சிறப்பு பராமரிப்பு பணிகளாக எடுத்துக்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று இந்தப் பணிகள் வரக்கூடிய 15.07.22–க்குள் சிறப்பு பணிகளாக விரைவாக முடித்திட வேண்டுமென்று துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை சீரான மின் விநியோகத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்னையை பொறுத்தவரை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மின் நுகர்வு அதிகரித்துள்ளது. அதிகரித்துவரக்கூடிய தேவைகளுக்கேற்ப கட்டமைப்புக்களை வலுப்படுத்த வேண்டுமென்று அலுவலர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, சென்னையில் 1427 இடங்களில் மழைக்காலங்களில் தரையோடு இருந்த பில்லர் பாக்ஸ்களின் உயரம் 1 மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. மீதம் இருக்கக்கூடிய இடங்கள் கணக்கெடுக்கப்பட்டு அந்த பணிகள் நிறைவு செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

UG கேபிள்கள் பொறுத்தவரைக்கும் சென்னையில் விடுப்பட்ட பகுதிகளில் விரைவாக முடிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்னையில் மெட்ரோ வாட்டர்,

மாநகராட்சி பணிகள் இரவு நேரங்களில் நடைபெறுகிறது. அவ்வாறு பணிகள் நடைபெறும்போது சம்மந்தப்பட்ட மின்வாரிய அலுவலர்கள் இணைந்து செயல்பட அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை பொறுத்தவரை கடந்த காலங்களில் இருந்த மின் தேவை என்பது இந்த ஓராண்டில் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப நிலுவையிலுள்ள புதிய மின் உற்பத்தி திட்டங்களை விரைவாக முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்திரவிட்டதற்கிணங்க வட சென்னை அனல் மின் நிலைய நிலை-3ன் கட்டுமானப் பணிகள் மற்றும் எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல பணிகள் ஆய்வு செய்யப்பட்டு விரைவுபடுத்தப்பட்டுள்ளது. 9 மண்டலங்களாக இருந்த மின்சார வாரியம் இந்த ஓராண்டில் 3 புதிய மண்டலங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த 20.06.2021–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மின்னகம் மின் நுகர்வோர் சேவை மையம் தொடங்கி வைக்கப்பட்டு, இந்த ஓராண்டில் 9,07,000 புகார்கள் பெறப்பட்டு 9,02,000 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இது மொத்தத்தில் 99.41% ஆகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் நிலக்கரி குறைந்த விலையில் கொள்முதல் செய்யப்படுகிறது. மாவட்டம் வாரியாக சூரிய மின்சக்தி பூங்கா அமைக்கும் பணிகளுக்காக அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டு நிலங்கள் பெறப்படக்கூடிய பணிகள் விரைவாக நடைபெற்றுவருகிறது. இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் ஆய்வு மேற்கொணடார்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in